இணைப்பு-II

(425 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 7 – மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) அறிவிப்புகள், 2010–2011.

அறிவிப்பு 1

மீன்பிடி தடை செய்யப்பட்ட காலங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை ரூ.500/–லிருந்து ரூ.800/– ஆக உயர்த்தி வழங்குதல்:

மீன்பிடி தடை செய்யப்பட்ட காலத்தில், மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ. 500/- நிவாரணத்தொகை இந்த ஆண்டு முதல் ரூ.300/- கூடுதலாக உயர்த்தப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.800/- ஆக வழங்கப்படும்.

அறிவிப்பு 2

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ், மீன்பிடிப்பு இல்லாத மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.1800/- கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் ரொக்கமாக வழங்கப்படும்.

அறிவிப்பு 3

இராமநாதபுரம் மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் கட்டுதல்:

மீனவ மக்களின் பயன்பட்டிற்கு இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தொகுதியில் உள்ள மூக்கையூர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த ஒரு திட்ட வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

அறிவிப்பு 4

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்:

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை பயன்படுத்தி மீன்பிடித் தொழில்புரியும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்கு, இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.20,000/- சென்ற 2009-2010 ஆம் ஆண்டில் ரூ.30,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை 3,000 ஆக உயர்த்தி மீனவர் வசிக்கும் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் 5 பயனாளிகளுக்கு இயந்திரங்கள் ரூபாய் 9 கோடி செலவில் வழங்கப்படும்.

அறிவிப்பு 5

ஆற்றுமுகத்துவாரங்களை தூர் வாருதல்:

பருவகால மாற்றத்தால் ஆற்று முகத்துவாரம் மற்றும் கால்வாய்களில் மண் திட்டுகள் படிவதால் முகத்துவாரம் அடைபட்டுவிடுகிறது. இதனால் மீனவர்கள் ஆற்று முகத்துவாரத்தைப் பயன்படுத்தி கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் ஆற்று முகத்துவாரங்களை தூர் வார 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி ஒப்புதல் அளிக்கப்படும்.

அறிவிப்பு 6

விற்பனை வரி நீக்கப்பட்ட டீசல் எண்ணெய் வழங்குதல்:

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களுக்கு வழங்கப்படும் விற்பனை வரி நீக்கப்பட்ட டீசல், மாதம் ஒன்றுக்கு 250 லிட்டரிலிருந்து 300 லிட்டராக உயர்த்தி வழங்கப்படும்.

அறிவிப்பு 7

மணிமுத்தாறு அரசு மீன் பண்ணையில் உள்ள மீனவர் குடியிருப்புகளை மறுசீரமைத்தல்:

1950 ஆம் ஆண்டு மணிமுத்தாறு நீர்த்தேக்கக் கட்டுமானப் பணியின்போது அமைக்கப்பட்ட பணியாளர் குடியிருப்புகள்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 மே 5]

அங்குள்ள மீன்விதைப் பண்ணையில் பணிபுரியும் மீனவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அனைத்து குடியிருப்புகளும் மங்களூர் ஓடுகள் வேயப்பட்ட கூரையுடன் களிமண் காரையினால் கட்டப்பட்டுள்ளன. தற்போது அனைத்து குடியிருப்புகளும் பழுதடைந்து குடியிருக்க இயலாத நிலையிலுள்ளதால், இக்குடியிருப்புகள் ரூ.19.00 இலட்சம் செலவில் இவ்வாண்டு மறுசீரமைக்கப்படும்.

அறிவிப்பு 8

பூண்டி மீன் துறை ஆய்வாளர் அலுவலக கட்டடத்தை பழுதுபார்த்தல்:

திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் அமைந்துள்ள மீன்வளத் துறை ஆய்வாளர் அலுவலகம், சத்தியமூர்த்திசாகர் நீர்த்தேக்க மீன்வள செயல்பாடுகளைக் கவனித்தல், மீன்பண்ணைகளில் தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம் செய்தல் மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொருட்டு 1956-1960 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதுவரை, இக்கட்டடத்தில் மராமத்து/பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இக்கட்டடம், ரூ.4.50 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்படும்.

அறிவிப்பு 9

மீன் துறை தலைமை அலுவலகத்தில் நிர்வாகப் பிரிவுகளை கணினிமயமாக்குதல்:

மீன் வளத் துறை தலைமை அலுவலக நிர்வாகப் பிரிவுகளை அகண்ட அலைவரிசை வசதியைக்கொண்டு இணைப்பதன்மூலம் மீனவர் நலத்திட்டங்கள் உரிய நேரத்தில் மீனவர்களை சென்றடைவதுடன், திட்டங்களை செம்மையாக செயல்படுத்திடவும் இயலும். எனவே, தலைமை அலுவலகத்தின் அனைத்து நிர்வாகப் பிரிவுகளையும் கணினிமயமாக்கி அகண்ட அலைவரிசையில் இணைக்க, ரூ.25.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

அறிவிப்பு 10

கடல் மீனவர் மக்கட்தொகை கணக்கெடுப்பு 2010:

டிசம்பர் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி காரணமாக கடல் மீனவ மக்கள்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வது

இன்றியமையாததாகி உள்ளது. சுனாமிக்குப் பின்னர், பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்களின் விவரங்கள் மற்றும் மீனவ மக்கள் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் பற்றிய விவரங்கள் ஆகியவற்றை அறிவது அவசியமாகிறது. மேலும், கடல் மீன்வள மேம்பாட்டிற்கும், எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்கும் மீனவர்கள் வசிக்கும் மீன்வக் கிராமங்கள், மீன்பிடி இறக்குதளங்கள், மீனவ மக்கள் தொகை மற்றும் மீனவர்களால் உபயோகப்படுத்தப்படும் வலைகள் மற்றும் கலன்கள் பற்றிய விவரங்கள் முக்கியமானவையாகும். இக்கணக்கெடுப்பு, மீன் துறையின் சார் அலுவலகங்களில் பணிபுரியும் மீன் வள மேற்பார்வையாளர் / மீன் துறை சார் ஆய்வாளர் / மீன் துறை ஆய்வாளர் ஆகியோரைப் பயன்படுத்தி ரூ.21.01 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

அறிவிப்பு 11

மீன் வளத் துறையின் 100 ஆண்டுக் கால செயல்பாடு குறித்து ஆவணப்படம் தயாரித்தல்:

மீன் வளத் துறையானது, 1907 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மீன் வளத் துறையின் தொடக்க காலம் தொட்டு இன்று வரை மீன் வளத்தைப் பெருக்குவதற்காகவும், மீனவர் நலனுக்காகவும், மீன் வளத் துறையின் நடவடிக்கைகளை மீனவர்களிடமும், பொது மக்களிடமும் எடுத்துச்செல்லும் வகையில் நூறு ஆண்டுக் கால செயல்பாடுகள் குறித்தான ஆவணப்படம் ரூ.11.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்படும்.

அறிவிப்பு 12

மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையத்தை மேம்படுத்துதல்:

மீன் துறைப் பணியாளர் பயிற்சி நிலையமானது, 1976 ஆம் ஆண்டு தொடங்கியது முதல் பயிற்சி நூலகத்துடன் செயல்பட்டு வருகிறது. மீன் துறை பணியாளர் பயிற்சி நிலையத்தின் மூலமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மீன் வளர்ப்போருக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்பயிற்சிகளை சிறப்பாக நடத்திடவும், மீன் துறை பணியாளர் பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தவும், மீன் வளம் தொடர்பான புத்தகங்கள், மாத இதழ்கள், கையேடுகள் மற்றும் மீன் வளம் பற்றிய செய்திகள்

2010 மே 5]

ஆகியவற்றை உடனுக்குடன் அறிந்துகொள்ள அகண்ட அலைவரிசை இணைப்பும் ரூ.4.70 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

அறிவிப்பு 13

கடலூர் மாவட்டத்தில் ஆற்று முகத்துவாரங்களில் தூர் வாருதல் :

கடலூர் மாவட்டத்தில் வெள்ளாற்று ஆற்று முகத்துவாரம், பில்லுமேடு ஆற்று முகத்துவாரம், பிச்சாவரம் செல்லும் கால்வாய் சின்ன வாய்க்கால் ஆற்று முகத்துவாரம் மற்றும் கால்வாய்கள் ரூ.29.04 இலட்சம் செலவில் தூர் வாரப்படும்.

அறிவிப்பு 14

மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர் சந்தை அமைத்தல் :

மன்னார் வளைகுடா பகுதியில் கிடைக்கக்கூடிய புரதச்சத்து மிக்க மீன்களை, சுகாதாரமான முறையில், இடைத்தரகர்களின் தலையீடு இல்லாமல் விற்பனை செய்யும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர் சந்தை ஒன்று அமைக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS